


26.05.2025

தலைப்பு செய்திகள்

- உற்பத்தி பிரிவில் இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- வெளிநாடுகளை சேர்ந்த 15 பல்கலைக்கழங்களின் வளாகங்கள் நம்நாட்டில் நடப்பு கல்வியாண்டில் ஏற்படுத்தப்படும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
- தமிழ் நாட்டில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை பதவியிடங்களுக்கு அடுத்தமாதம் 19-ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கனமழை காரணமாக அப்பகுதி நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.
- நார்வே செஸ் போட்டியில் இந்தியா வீரர்கள் குகேஷ், அர்ஜுன் எரிகெய்சி ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

உற்பத்தி பிரிவில் இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் தாஹோத்தில் இன்று உரையாற்றி அவர், உள்நாட்டிற்கு தேவைப்படும் பொருட்களையும், ஏற்றுமதிக்கான பொருட்களையும் தயாரிப்பதில் இந்தியா வளர்ச்சிபெற்று வருவதாக குறிப்பிட்டார்.

ஸ்மார்ட் போன் முதல் பாதுகாப்பு தளவாடங்கள் வரை அனைத்தையும் தயாரித்து இந்தியா ஏற்றுமதி செய்துவருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

ரயில்வே துறைக்கு தேவைப்படும் அத்தியாவசிய தொழில் நுட்பங்களை தயாரிப்பதோடு, மெட்ரோ ரயில் தளவாடங்களையும் சொந்தமாக உற்பத்தி செய்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நம்நாட்டின் வளர்ச்சிக்கு தேவைப்படும் அனைத்தும் உள்நாட்டிலேயே தயாரிப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த பாரத பாதையில் 140 கோடி இந்தியர்கள் இணைந்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னதாக தாஹோத்தில் தாஹோத்தில் இந்திய மின்சார ரயில் உற்பத்தி தொழிற்சாலையை பிரதமர் தொடங்கிவைத்தார்.

இந்த ஆலையில் தயாரிக்கப்பட்ட முதலாவது மின்சார ரயில் வாகனத்தையும் பிரதமர் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

மேலும் வெராவல் - அஹமதாபாத் இடையே வந்தே பாரத் ரயில் போக்குவரத்தை தொடங்கி வைத்த அவர், வல்சத் - தாஹோத் நிலையங்களுக்கிடையே விரைவு ரயில் போக்குவரத்தையும் தொடங்கிவைத்தார்.

முன்னதாக வதோதராவில் பிரம்மாண்டமான சாலை பேரணியில் இன்று பங்கேற்றார்.

இருமருங்கிலும் குழுமிய பொதுமக்கள் பிரதமருக்கு சிறப்பான வரவேற்பை அளித்தனர்.

2 நாள் பயணமாக குஜராத் சென்றுள்ள பிரதமர் காந்திநகர், புஜ், தாஹோத் பகுதிகளில் 82 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முடிவடைந்த திட்டப்பணிகளை தொடங்கிவைப்பதுடன் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் பதவிக்காலம்

பிரதமராக திரு. நரேந்திரமோடி பதவியேற்று 11 ஆண்டுகள் இன்று நிறைவடைந்துள்ளது.

2014-ம் ஆண்டு, நாட்டின் 14-வது பிரதமராக இதேநாளில் அவர் பொறுப்பேற்ற நிலையில், நாடு வலுவான தீர்க்கமான வளர்ச்சிப் பாதையில் நம் தேசம் பயணித்து வருகிறது.

ஏழை எளிய மக்களின் மேம்பாட்டில் தனிகவனம் செலுத்தி அனைவருக்குமான வளர்ச்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு கடந்த 11 ஆண்டுகளாக அரசு செயலாற்றி முன்னேற்றப்பாதையில் தேசம் பயணிக்கின்றது.

சாமானிய மக்களுக்கான அடிப்படை வசதிகளின் தரத்தை மேம்படுத்தி கட்டமைப்பை முன்னெடுத்துச் சென்று பொருளாதாரத்தை வலுப்படுத்தி வேலை வாய்ப்பை உருவாக்கி உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்து உலகளவில் இந்தியாவின் அந்தஸ்து உயர்ந்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு சர்வதேச அளவில் நம்நாட்டிற்கான புதிய பாதையை ஏற்படுத்தி, 4-வது பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியாவை முன்னெடுத்துச் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

2047-ம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாதையை நோக்கி இந்தியா தற்போது பயணித்து வருவதற்கான அடித்தளம் கடந்த 11 ஆண்டுகளாக வலுவாக உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் 11 ஆண்டு ஆட்சி நிறைவு குறித்து தமிழ்நாடு கிரிக்கெட் சங்க நடுவர் மற்றும் பயிற்சியாளரும், பிரபல தமிழ் நாளிதழின் நிரூபருமான திரு. சுப்பராமன் பேசுகையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

நடப்பு கல்வியாண்டில் 15 வெளிநாட்டு பல்கலைக் கழங்கள் தங்களது வளாகங்களை நம்நாட்டில் ஏற்படுத்தவுள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் லிவர்பூல் பல்கலைக்கழகம் உடனான ஒரு ஒப்பந்த நிகழ்வில் புதுதில்லியில் இன்று உரையாற்றிய அமைச்சர், பல்கலைக்கழகங்களின் வளாகங்கள் செயல்படுவதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வால் உயர்கல்வியில் இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு அதிகரித்து இருதரப்பிலும் மாணாக்கர் பயன்பெறுவார்கள் என்று அமைச்சர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. தர்மேந்திர பிரதான், லிவர்பூல் பல்கலைகக்கழகத்தின் வளாகம் அடுத்த ஆண்டு முதல் நம்நாட்டில் செயல்பட தொடங்கும் என்றார்.

ஏற்கனவே ஆஸ்திரேலியாவை சேர்ந்த இரு பல்கலைக் கழகங்கள் குஜராத்தில் தங்களது கல்வி சார்ந்த அமர்வுகளை தொடங்கி இருப்பதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

மாநிலங்களவை தேர்தல்

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை இடங்களுக்கு அடுத்தமாதம் 19-ம் தேதி நடைபெற உள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் மதிமுக பொதுச்செயலர் திரு. வைகோ, பா.மா.கவின் டாக்டர் அன்புமணி ராமதாஸ், திமுக.வின் திரு. எம். சண்முகம், திரு. எம். முகமது அப்துல்லா, திரு. பி. வில்சன், அஇஅதிமுக.வின் திரு. என். சந்திரசேகரன், ஆகிய 6 பேரின் மாநிலங்களவை பதவிக்காலம் வரும் ஜூலை 24-ம் தேதி முடிவடைகிறது

இதனையடுத்து தேர்தல் அறிவிக்கை வரும் 2-ம் தேதி வெளியிடப்பட்டு வேட்புமனு தாக்கல் அன்றைய தினம் தொடங்குகிறது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 9-ம் தேதி கடைசிநாளாகும்.

10-ம் தேதி அவை பரிசீலிக்கப்படுகின்றன.

12-ம் தேதி மனுக்களை திரும்பபெற இறுதி நாளாகும்.

தேர்தல் நடைபெறும் ஜுன் 19-ம் தேதி வாக்குகள் எண்ணப்படும்.

அதேபோல் அசாம் மாநிலத்தில் காலியாகவுள்ள 2 மாநிலங்களவை பதவியிடங்களுக்கும் அடுத்தமாதம் 19-ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் உயர்கல்வித்துறை சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு கலை அறிவியல் கல்லூரிகளை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக நடைபெறும் நிகழ்ச்சியில் பண்ருட்டி, குன்னூர், நத்தம், ஆலந்தூர், விக்ரவாண்டி, செய்யூர், மானாமதுரை, முத்துப்பேட்டை, திருவிடைமருதூர், கொளக்காநத்தம், ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் கல்லூரிகளை அவர் துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

அணைகள்

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் தொடர்மழை காரணமாக அப்பகுதிகளில் உள்ள நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

கோவை மாவட்டம் பில்லூர் அணை அதன் முழுகொள்ளளவை எட்டிய நிலையில் 18 ஆயிரம் கனஅடி தண்ணீர், 4 மதகுகள் வழியாக பவானி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் பவானி ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்மழை காரணமாக, முக்கிய சுற்றுலாத் தளங்களான கோவை குற்றாலம், பரலிக்காடு, வால்பாறை கவியருவி உள்ளிட்ட தளங்கள் மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... கோவை வாய்ஸ் ...

திருமூர்த்தி மலையில் உள்ள பஞ்சலிங்க அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு கோவிலில் தரிசனம் செய்யவும், அருவிகளில் குளிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் மேகமழை நீத்தக்காடு உள்ளிட்ட சுருளி அருவியின் நீர்பிடிப்பு பகுதிகளில் நேற்றிரவு முதல் பெய்த கனமழை காரணமாக அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

தென்காசி மாவட்டத்தில் தொடர்மழை காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

மணிமுத்தாறு அணையிலும் நீர் வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

நீலகிரி மாவட்டத்திற்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் முன்னெச்சரிக்கையாக சுற்றுலா தளங்கள் மூடப்பட்டுள்ளது.

தொடர்மழை காரணமாக நீலகிரி மாவட்டம் கோத்தகிரி சாலையில் 20 அடி உயரமுள்ள தடுப்புசுவர் சரிந்து விழுந்தது.

இடுபாடுகளை அகற்றும் பணியில் நெடுஞ்சாலைத் துறையினர் முழுவீச்சில் மேற்கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

இதனிடையே நீலகிரி மாவட்டம் இத்தலார் சுற்றுவட்டார பகுதியில் பெய்த கனமழையால் மெம்பட்டி சாலையில் மண்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை துறையினர் சிரமைப்பு பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனா.

இந்நிலையில் உதகை மற்றும் சுற்றுபுற பகுதிகளில் உள்ள மின் கம்பங்கள் மீது மரங்கள் விழுந்ததால் மின்தடை ஏற்பட்டுள்ளது.

உதகை படகு இல்ல சாலையில் நீர் தேங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் முன்னெச்சரிக்கையாக படகு இல்லம், பைக்காரா படகு இல்லம், தொட்டபெட்டா, நீர்வீழ்ச்சிகள், ரோஜா பூங்கா உள்ளிட்ட சுற்றுலாதளங்கள் மூடப்பட்டுள்ளன.

நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

பொன்னாணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து, கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்

கன்னியாகுமரி கடல் பகுதிகளில் மணிக்கு 45 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என வானிலை ஆய்வுமையம் எச்சரிக்கை விடுத்ததையடுத்து மீனவர்கள் இன்று மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

மேட்டூர் அணை

காவிரி டெல்டா பாசனத்திற்காக வரும் ஜுன் 12-ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும் என, மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வழக்கமான நடைமுறைப்படி, மேட்டூர் அணையிலிருந்து வரும் 12-ம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கியதன் காரணமாக ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்ட மலை பகுதிகள், நீலகிரி, திருநெல்வேலி, தேனி, தென்காசி, கன்னியாகுமரி, திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

மன்னார் வளைகுடா, தமிழக கடலோர பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

செஸ்

Stavanger ல் நடைபெறும் நார்வே செஸ் போட்டியில் இந்தியாவின் முன்னிணி வீரர்களான குகேஷ் மற்றும் அர்ஜுன் எரிகேசி களமிறங்குகின்றனர்.

குகேஷ் தனது முதல் போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான Magnus Carlsen ஐ எதிர்கொள்கிறார்.

எரிகெய்சி – சீனாவின் வேய்யி உடன் மோதுகிறார்.

மகளிர் பிரிவில் கொனேரு ஹம்பி முதல் சுற்றில் சக இந்தியா வீராங்கனை ஆர். வைஷாலியை எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

குத்துச்சண்டை

பேங்காக்கில் நடைபெற்ற தாய்லாந்து ஓப்பன் சர்வதேச குத்துச்சண்டை போட்டியின் 55 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் பவன் பர்த்வால் - கம்போடியாவின் சாவ் ராங்சியை 5-0 என்ற கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.